# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2433 - 2025 අප්‍රේල් මස 17වැනි සිකුරාදා - 2025.04.17

2433ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II ஆ) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| - | |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 280 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, மே மாதம் 02ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஏப்பிறல் மாதம் 17ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கே.ஜீ. பிரதீப் புஸ்ப குமார,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

279 - B 82660 - 403 (2025/04)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - அக்கரைப்பற்று

### அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை - 2025

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்படாத கீழ் குறிப்புடப்படும் பொருட்கள் 2025.04.26 ஆந் திகதியன்று காலை 9.00 மணிக்கு இந்நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

01. இப் பொருட்களுக்காக உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

02. பொருட்களை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

03. பகிரங்க ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்குரிய விலை கிடைக்கப்பெறாதவிடத்து ஏல விற்பனையிலிருந்து மீளப்பெறும் உரமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

04. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாகவே நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும்.

05. எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. பொருட்களை கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டையைக் கொண்டுவர வேண்டும்.

நீதவான்.

நீதிவான் நீதிமன்றம்,
அக்கரைப்பற்று.

**ஏலவிற்பனை செய்யப்படும் சான்றுப் பொருட்களின் விபரம்**

| தொடர் இல. | வழக்கிலக்கம் | சான்றுப்பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 60029/ Top/21 | 206- 8329 இலக்க முச்சக்கர வண்டி | 01 |
| 2. | 662167/E/21 | EP AAZ 9314 இலக்க முச்சக்கர வண்டி | 01 |
| 3. | 66853/Misc/23 | EP SE 5719 ஆம் இலக்க கை உழவியந்திரம் | 01 |
| 4. | 63266/WL/22 | EP WP 0542 ஆம் இலக்க மோட்டார் சைக்கிள் | 01 |
| 5. | 67002/MT/23 | ஹொனட் இன் மோட்டார் சைக்கிள் | 01 |
| 6. | 64255/E/24 | EP BEW 3803 ஆம் இலக்க மோட்டார் சைக்கிள் | 01 |
| 7. | 68386/E/24 | EPVB 0555 ஆம் இலக்க மோட்டார் சைக்கிள் | 01 |
| 8. | 63518/PE/21 | EP MD 2406 ஆம் இலக்க மோட்டார் சைக்கிள் | 01 |

04- 114

## நீதிவான் நீதிமன்றம்- சம்மாந்துறை

### பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2025.04.26 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்த நீதிமன்ற பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதி மன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்பத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏலவிற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏலவிற்பனையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்

நீதவான்.

நீதிவான் நீதிமன்றம்,
சம்மாந்துறை,
2025.04.09.

| *தொ. இல.* | *வழக்கிலக்கம்* | *வாகனப் பதிவு இல.* | *சான்றுப்பொருட்களின் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| 1. | AR/15/24 | HL- 0266 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 1 |
| 2. | 30428/ODD/23 | BCQ - 6506 | மோட்டார் சைக்கிள் | 1 |
| 3. | 33180/E/24 | | அடுப்பு | 1 |
| 4. | 33180/E/24 | | கேஸ் சிலிண்டர் | 1 |
| 5. | 33180/E/24 | | அலுமீனிய சட்டி | 1 |
| 6. | 33523/Misc/24 | | இரும்பு வாளி | 1 |
| 7. | 33540/Misc/24 | | சவள் | 1 |
| 8. | 30771/Misc/23 | | சவள் | 1 |
| 9. | 30771/Misc/23 | | இரும்பு வாளி | 1 |
| 10. | 29510/Misc/23 | | சவள் | 1 |
| 11. | 29510/Misc/23 | | இரும்பு வாளி | 1 |
| 12. | 30219/Misc/23 | | சவள் | 1 |
| 13. | 30318/Misc/23 | | சவள் | 1 |
| 14. | 32903/Misc/23 | | சவள் | 1 |
| 15. | 33541/Misc/23 | | சவள் | 1 |
| 16. | 25823/Misc/23 | | சவள் | 1 |

04- 163

# ஆயவிற்பனையும் குத்தகையும்

**மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவு ஆறுமுகத்தான்குடியிருப்பு**

**கள்ளுத்தவறணைக்கான குத்தகை விற்பனை**

2025 யூலை - 2026 யூன்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்கமுடைய 1982.08.20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் வெளிவந்த 1982 ஆம் ஆண்டின் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை விதிகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேசத்திற்குட்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பு கள்ளுத்தவறணைக்கான 2025, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2026, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிட்ட திகதி நேரம் வரை ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச்சபை கூட்டத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

01. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா (1500) பணத்தை ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்படிவத்தை பெறமுடியும். கேள்விப்பத்திரத்துடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2025.05.02 ஆந் திகதி முதல் 2025.05.16 ஆந் திகதி பி.ா. 3.00 மணியுடன் முடிவடையும்.

02.அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதி சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதி சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

03. பிழையாக பூரணப்பத்தப்படும் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

04. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு கட்டிய பணத்தை மீளப்பெற விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் மீளச்சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

05. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

06. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவு சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத்தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவி கூட்டறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்படிவம் வழங்கப்படும் . ( நிதி அமைச்சின் 01/ 2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்று நிருபத்திற்கு அமைவாக காணப்படுதல் வேண்டும்.)

07. ஏனைய விபரங்களை ஏறாவூர்பற்றி செங்கலடி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. தனபாலசுந்தரம்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
ஏறாவூர்பற்று செங்கலடி,
2025.04.18.

**கள்ளுத்தவறணை அமைய வேண்டிய இடம்**

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் / நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| ஆறுமுகத்தான் குடியிருப்பு | TT No.1 | 2025.06.12 | மு.ப. 10.00 மணி |

**குறிப்பு -** 1. கேள்விச்சபை 2025.06.12 ஆந் திகதி முற்பகல் 10.00 மணிக்குக் கூடும்.

2. விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் மறு கேள்விசபை 2025.06.19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

04- 111

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**பகிரங்க அறிவித்தல்**

பொது நிறுவனமாக மாற்றும்போது ஏற்படும் பெயர்மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின்படி, வெங்கடேஸ்வர அஃரோ இண்டஸ்ட்ரி ( பிரைவட்) லிமிடட் (கம்பனி இல. ( பீவீ 99258) ஆனது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் ப திவுசெய்யப்பட்டாதாக அறிவிப்பு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் படி இல.01, இண்டஸ்ட்ரியல் சோன், அச்சுவெளி இல் பதிவுவெய்யப்பட்ட அலுவலகம் 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி முதல் பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாக மாற்றப்படும் மற்றும் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் படி நிறுவனமானது அதன் பெயரை வெங்கடேஸ்வர அஃரோ இண்டஸ்ட்ரி லிமிடட் ஆக மாற்றியதாகக் கருதப்படும்.

வாரியத்தின் கட்டளைப்படி,

சார்ட் பிஸ்னஸ் சிஸ்டம்ஸ் ( பிரைவட்) லிமிடட்,
செயலாளர்கள்.

இல.09- 1/2,
03 ஆவது மாடி,
பாடசாலை வீதி,
கொள்ளுபிடிய,
கொழும்பு -03.

04- 130

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் 320(1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்**

ரெஃப்ள்ஸ் சிலோன் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் இல. பீவீ 00236207
**உறுப்பினர்களின் தன்னிச்சையான கலைப்பு**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 319(1) (b) ஆம் பிரிவின்படி, இல. 262, கோட்டே வீதி, மிரிஹான, நுகேகொடை, சஹாரா மண்டபத்தில் நடைபெற்ற நிறுவனத்தின் அசாதாரண பொதுக் கூட்டத்தில் ஒரு சிறப்த் தீர்மான் நிறைவேற்றப்பட்டது என்று இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி கம்பனியை உறுப்பினர்களின் தன்னார்வ முற்றுப்புள்ளியாக மூடுவதற்கு மற்றும் இல. 09, 03 ஆவது மாடி. பள்ளிப்பாதை, கொழும்பு 03 இன் பட்டயக் கணக்காளர் திரு. விதான ஆராச்சிலாகே சானக புஷ்பகுமார அவர்கள் கலைப்பாளராக 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி முதல் நியமிக்கப்படுவார்.

விதான ஆராச்சிலாகே சானக புஷ்பகுமார,
கலைப்பாளர்.

இல.09,
03 ஆவது மாடி,
பள்ளிப்பாதை,
கொழும்பு -03.

04- 131/1

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் 346(1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்**

ரெஃப்ப்ள்ஸ் சிலோன் (பிரைவேட்) லிமிடெட்
நிறுவனத்தின் இல. பீவீ 00236207

கலைப்பாளரை நியமிப்பதற்கான அறிவிப்பு

2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி நடாத்தப்பட்ட இக்கம்பனியின் விசேட மகாசபைக் கூட்டத்தில் ரெஃப்ப்ள்ஸ் சிலோன் ( பிரைவேட்) லிமிடெட் கம்பனியின் கலைப்பாளராக விசேட பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் மூலம் பட்டயக் கணக்காளரான விதான ஆராச்சிலாகே சானக புஷ்பகுமார ஆகிய நான், நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை இல. 09, 03ஆவது மாடி. பள்ளிப்பாதை, கொழும்பு 03 எனும் இடத்தை சேர்ந்த நான் அறிவிக்கின்றேன்.

விதான ஆராச்சிலாகே சானக புஷ்பகுமார,
கலைப்பாளர்.

இல.09,
03 ஆவது மாடி,
பள்ளிப்பாதை,
கொழும்பு -03.

04- 131/2

---

**அறிவித்தல்**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பகுதி 9(2) பிரிவின் கீழ், கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*கம்பனியின் பழைய பெயர்* : கெபிட்டல் ஹொஸ்பிடெலிடி ( பிரைவட்) லிமிட்டட்
*கம்பனி பதிவு இலக்கம்* : PV 00260288
*பதிவு அலுவலக முகவரி* : இல10, அல்பிரட் கிரசன்ட், கொழும்பு 07
*கம்பனியின் புதிய பெயர்*: டீ என்ட் பீ ஹொஸ்பிடெலிடி ( பிரைவட்) லிமிட்டட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

G.W. செக்ரடரீஸ் அன்ட் எக்கவுன்டன்ஸ்
(பிரைவட்) லிமிட்டட் ,
கம்பனிச் செயலாளர்கள்.

04- 132

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்59(2) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் அறிவித்தல்**

ஆ சியா சிகியுரிடீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் ( பிறைவட்) லிமிடட் ( கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 130083) ஆனது பதிவு செய்யப்பட்ட முகவரியாக 4 ஆம் மாடி, லீ ஹெஜ்ஸ் டவர், 349, காலி வீதி. கொழும்பு 03 கொண்டுள்ளதோடு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் பகிரங்க அறிவித்தலிற்கு ஏற்ப அதன் கூறப்பட்ட மூலதனத்தை இலங்கை ரூபாய் நூற்று முப்பத்தெட்டு மில்லியன் நூறு (LKR 138,000,100) இலிருந்து இலங்கை ரூபாய் முப்பத்தெட்டு மில்லியன் நூறாக (LKR 38,000,100) குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோபரேட் சேர்விசஸ் ( பிரைவேட்) லிமிடட்,
செயலாளர்கள்,
ஆசியா சிகியுரிடீஸ் வெல்த் மெனேஜ்மன்ட்
(பிறைவட்) லிமிடட் .

04- 144

## அறிவித்தல்

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பகுதி 9(2) (திருத்தப்பட்ட) இன் படி 2025.03.28 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் பின்வரும் பெயர் மாற்றம் குறித்து இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.**

*நிறுவனத்தின் பழைய பெயர்* : சர்வோதய க்ளோபல் கேட்வே ( பீவீடீ) எல்டீடி
*நிறுவனத்தின் பதிவு இலக்கம்* : PV 00310810
*நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரி* : இல.98, ராவதாவத்த வீதி, மொரட்டுவை
*நிறுவனத்தின் புதிய பெயர்* : சரோதா க்ளோபல் கேட்வே ( பீவீடீ) எல்டீடி

கோப்பரேட் கன்சல்டன்சி சேர்விஸஸ்
(பிறைவட்) லிமிட்டட்.

இல. 48, ரொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு -07.

04- 150